**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 157** **நாள் : 04.07.2025**

**மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார் அவர்கள், மெரினா கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான நடைபாதையில் மேற்கொள்ளப்படவுள்ள சீரமைப்புப் பணிகள் மற்றும் நீல வண்ணக்கொடி கடற்கரை சான்றிற்கான மேம்பாட்டுப் பணிகள் குறித்து இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

இன்று (04.07.2025) மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார் அவர்கள், மெரினா கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான நடைபாதையில் மேற்கொள்ளப்படவுள்ள சீரமைப்புப் பணிகள் தொடர்பாக நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைவில் தொடங்கி முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, மெரினா கடற்கரையில் நீல வண்ணக்கொடி கடற்கரை சான்றிற்கான மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருவதைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மெரினா கடற்கரையில் TN-SHORE திட்டத்தின் கீழ் ரூ.6 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் பாதை கண்காணிப்பு கோபுரங்கள் மற்றும் நிழலான இருக்கை வசதிகளுடன் கூடிய ஓய்வுப் பகுதிகள், உடை மாற்றும் அறைகள், கழிப்பறைகள் மற்றும் குடிநீர் நிலையங்களை அமைத்தல், வயதானவர்களுக்கு இருக்கை வசதிகள் குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்களை அமைத்தல், உயிர்காக்கும் கோபுரங்கள், கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் முதலுதவி மையங்கள் அமைத்தல், மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்வுதளங்கள், சுய புகைப்படங்கள் எடுக்கும் இடம் மற்றும் நுழைவாயில் வளைவு அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த ஆய்வின்போது, மண்டலக்குழுத் தலைவர் திரு.எஸ்.மதன்மோகன், மாமன்ற உறுப்பினர் திருமதி ரா. மங்கை, கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.சீனிவாசன் (சிறப்புத் திட்டங்கள்), திரு.திருமுருகன் (பேருந்து சாலைகள்), செயற்பொறியாளர் திரு.புருஷோத்தமன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**